# பன்மைக் கலாச்சார சமுதாய இயல்திறனுக்கான மானியம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

**பன்மைக்கலாச்சார சமுதாய இயல்திறனுக்கான மானியம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது** (The Multicultural Community Capacity Grant program), ஒன்ட்டேரியோவின் குடிமை, கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார வாழ்வில், புதிதாக வருபவர்கள் மற்றும் இனரீதியான கலாச்சார சமுதாயத்தினர் முழுமையாக பங்கேற்பதற்காக, அவர்களின் திறனை மேம்படுத்துவதன் மூலம் பல்வேறான மற்றும் அனைத்தும் சேர்ந்த சமுதாயங்களைக் கட்டமைப்பதற்கு உதவும்.

இந்த மானியம் வழங்கும் திட்டமானது, ஒன்று அல்லது அதற்கு அதிகமான பின்வரும் முன்னுரிமைகளுக்கு தீர்வு காணுகின்ற திட்டப்பணிகளுக்கு, ஒன்ட்டேரியோ எங்கிலுமாக நிதி கிடைக்கப்பெறச் செய்யும்:

- **குடிமை ஈடுபாடு** - புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் இனரீதியான கலாச்சாரம் கொண்ட சமுதாயத்தினர் ஆகியோரைச் சேர்த்துக்கொள்வதை முன்னெடுப்பதற்காக சமுதாய ஈடுபாடு, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தன்னார்வமான தன்மை ஆகியவற்றுக்கு வசதியமைத்துக்கொடுத்தல்.
- **சமூக இணைப்புக்கள்** - தடைகளைக் குறைக்கும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்பட, சமூக இணைப்புக்கள் மற்றும் பணியமர்த்தலுக்கான ஒரு வலைப்பின்னலை முன்னெடுப்பது மற்றும் பாதிப்படையக்கூடிய மக்களுக்கான ஆதரவை அதிகரித்தல்.
- **கல்வி மற்றும் அதிகாரமளித்தல்** - பரஸ்பர கலாச்சாரங்களைப் புரிந்துகொள்ளுதலை மேம்படுத்தல் மற்றும் சமுதாய வாழ்க்கை மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றில் பங்கேற்பதில் ஏற்படும் தடைகளை அகற்றுதல்.
- **பெண்களுக்கான அதிகாரமளித்தல்** - பெண்கள் தங்களுக்கான முழுமையான சமூக மற்றும் பொருளாதார உட்பொதிவினை அடைவதற்காக, பல்வேறான கலாச்சாரப் பின்னணி கொண்ட பெண்களுக்கு உதவுவதன் மூலமாக அவர்களுக்கு அதிகாரமளிப்பதில் ஆதரவளித்தல்.
- **இயல்திறன் கட்டமைத்தல் மற்றும் கூட்டு சேருதல்** - புதிதாக வருபவர்கள் மற்றும் இனரீதியான கலாச்சார சமுதாயத்தினர் ஆகியோருக்கு சிறப்பாக சேவை புரிவதற்காக, புலம் பெயர்ந்த மற்றும் பன்மைக் கலாச்சார நிறுவன அமைப்புக்களுக்கு இயல்திறன் கட்டமைப்பு செய்தல், மற்றும் சேவை அளிப்பாளர்கள் கூட்டு சேருவதை மேம்படுத்தல்.

இந்த முன்னுரிமைகளுக்கு தீர்வு காண்பதற்கான திட்டப்பணிகளுக்காக, மானியமாக $1,000 லிருந்து $8,000 வரை கிடைக்கப்பெறும். **திட்டப்பணிகள் ஏப்ரல் 1, 2018 தேதியில் அல்லது அதற்குப் பின்னர் துவங்கி மார்ச் 31, 2019 இல் முடிய வேண்டும்.**

## நிதி பெறுவதற்கு யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

**வழிமுறை 1:** லாப நோக்கம் இல்லாமல், புதிதாக வருபவர்கள் மற்றும்/அல்லது இனரீதியான கலாச்சார சமுதாயத்தினர் ஆகியோர் மீது கவனம் செலுத்தி குறைந்தது ஒரு ஆண்டு முடிவடைந்த பதிவுபெற்ற நிறுவனத்திற்கு பிரதி நிதித்துவம் செய்கின்ற தனி நபர்கள் **$1000 முதல் $3000 வரையிலுமான** மானியங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

**வழிமுறை 2:** லாப நோக்கம் இல்லாமல், தொலை நோக்குப்பார்வை, அதற்கான செயல்திட்டங்கள் அல்லது புதிதாக வருபவர்கள் மற்றும்/அல்லது இனரீதியான கலாச்சார சமுதாயத்தினர் ஆகியோர் மீது கவனம் செலுத்துகின்ற செயல்பாடுகளைச் செய்வதற்காக, ஒரு நிறுவன அமைப்பாக பதிவுசெய்துகொண்ட அமைப்புக்கள், மற்றும் நிறுவன அமைப்பாக பதிவுபெற்று குறைந்தது ஒரு ஆண்டு நிறைவு செய்த அமைப்புக்கள் **$3000 முதல் $8000 வரையிலுமான** மானியங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

## நிதி பெறுவதற்காக, நான் விண்ணப்பம் செய்வது எப்படி?

விண்ணப்பம் செய்வதற்கான வழிகாட்டுதல்களைப் படித்து, விண்ணப்ப படிவம் மற்றும் அதற்கான அறிவுரைகளை ontario.ca/multiculturalgrants எனும் வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## விண்ணப்பிப்பதற்கான இறுதி தேதி எது?

விண்ணப்பங்களை சமர்ப்பதற்காக இறுதி தேதியானது ஜனவரி 23, 2018 பிற்பகல் 4:00 மணி E.S.T. ஆகும்.

## கேள்விகள் ஏதேனும்?

மேலும் தகவல்களுக்கு Regional Services Branch ministry contact ஐத் தொடர்பு கொள்ளவும். அமைச்சகத்தின் பிராந்திய ஆலோசகரை பின் வரும் பிராந்திய அலுவலகங்களில் கட்டணமில்லா தொலைபேசி வழியாக தொடர்பு கொள்ளவும்:

- மத்திய பிராந்தியம்: 1-877-395-4105
- வடக்குப் பிராந்தியம்: 1-800-465-6861
- கிழக்குப் பிராந்தியம்: 1-800-267-9340
- மேற்குப் பிராந்தியம்: 1-800-265-2189

அல்லது உங்கள் கேள்வியை **multiculturalgrants.inquiries@ontario.ca** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

Ontario